செய்தி வெளியீடு எண் : 2486 நாள் : 11.12.2023

# மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் தலைமையில் பத்திரிகையாளர் நல வாரியத்தின் ஆறாவது கூட்டம் நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் தலைமையில் இன்று (11.12.2023) சென்னை, தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் பத்திரிகையாளர் நல வாரியத்தின் ஆறாவது கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், பத்திரிகையாளர் ஓய்வூதியம் கோரி வரப்பெற்ற விண்ணப்பங்களும் மற்றும் பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி கோரி வரப்பெற்ற விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்பட்டன. மேலும், பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த பொருண்மைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

முன்னதாக, பத்திரிகையாளர் குடும்ப நலநிதியத் திட்டத்தின் கீழ் மூன்று பத்திரிகையாளர்களுக்கு மொத்தம் ரூபாய் 5,10,133/-க்கான மருத்துவ உதவிக்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அரசு கூடுதல் செயலாளர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. த.மோகன், இ.ஆ.ப., பத்திரிகையாளர் நல வாரியத்தின் அலுவல்சாரா உறுப்பினர்கள் திரு. சிவந்தி ஆதித்யன் பாலசுப்பிரமணியன், திரு. ஆர்.எம்.ஆர்.ரமேஷ், திரு.பி.கோலப்பன், திருமதி லட்சுமி சுப்பிரமணியன், திரு. எஸ்.கவாஸ்கர், திரு. எம்.ரமேஷ், அலுவல்சார் உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in